வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

ந.க.எண்.4312 /ஆ4/2022 நாள் .14.12.2022

பொருள் : தேர்வுகள் –வேலூர் மாவட்டம் –மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு –மார்ச்2023 –மாற்றுத்திறனாளி பள்ளி மாணாக்கர்கள்–சலுகைகள் கோரும் தேர்வர்கள் விவரம் –கோருதல் –சார்பு

பார்வை : அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செய்லமுறைகள் ந.க.எண்.025196 / எச்1/2022 நாள் 13.12.2022

==============

பார்வையில் காணும் அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின் படி, வேலூர் மாவட்டம், மார்ச் 2023 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வு எழுதவுள்ள சலுகை கோரும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து கீழ்க்காணும் வகையில் வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலக ஆ4 பிரிவில் 23.12.2022க்குள் சமர்பிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்குறிப்பிட்ட தேதிக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அவ்வாறு தாமதமாக விண்ணப்பங்கள் சமந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாற்றுத்திறனாளி மாணவர்களிடம் இருந்து பூர்த்தி செய்யப்பட விண்ணப்பபடிவம் (படிவம் –1) , மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை நகல் அல்லது மருத்துவக்குழுவின் பரிந்துரைக் கடிதம், மாணவர்,மாணவர் பெற்றோர், மற்றும் வகுப்பாசிரியர் கடிதம் மற்றும் படிவம் –2 பூர்த்தி செய்து இரண்டு பிரதிகளில் சமர்பிக்கவேண்டும்.

இணைப்பு :

1. பார்வை கடித நகல்
2. படிவம்–1
3. படிவம் –2
4. பட்டியல்
5. அரசாணை

ஓம்.க.முனுசாமி
முதன்மைக் கல்வி அலுவலர்
வேலூர்

பெறுநர்,

அனைத்து வகை மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் ,வே.மா.

நகல் ,

1. மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை) வே.மா,தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.
2. மாவட்ட கல்வி அலுவலர் (தனியார் ) வே.மா,தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கைக்காகவும் அனுப்பலாகிறது.